# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 232/2023 நாள்.09.03.2026

PW1- திருமதி. அனுசியா , க/பெ. திரு.ராகவன்

1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

1ஆம் பிரதிவாதி என் மகனா என்றால் ஆமாம். என் கணவர் ராகவன் 16.6.1981 இல் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். வழக்கு சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது. அதற்கு பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் என் மகன் ரவி எடுத்துகொண்டுபோய் வைத்துகொண்டான்.பத்திரம் என் மகனிடம் உள்ளது அதனை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவேண்டும் என்று மனு கொடுத்தோமா என்றால் கொடுத்திருப்பாங்க. சொத்து எனக்கு தனிபட்ட முறையில் பாத்தியமானது என்று சொல்லுவது தவறு என்று 1ஆம் பிரதிவாதி கூறுகிறார் என்றால் சரியல்ல. சொத்தை என் மகனிடம் எப்போது கொடுத்தேன் என்றால் லோனுக்கு என்று என்னை அடித்து கூட்டிகொண்டு வந்து எழுதி வாங்கினார். நான் லோனுக்கு ஏன் கையெழுத்து போட்டேன் என்றால் லோனுக்குதான் என்று என் மகன் கையெழுத்து வாங்கிவிட்டான். நான்தான் என் மகனுக்கு எழுதிகொடுத்துவிட்டு தற்போது தவறாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் மகனுக்கு 2020இல் செட்டில்மெண்ட் எழுதிகொடுத்தேன் என்றால் லோனுக்குதான் கையெழுத்து வாங்கினான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. நான் செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டு அதற்கு முரணாக செய்யவேண்டும் என்பதற்காக இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றால் நான் செட்டில்மெண்ட் எழுதி கொடுக்கவில்லை ஏமாற்றி எழுதிவாங்கிவிட்டார். மேற்கண்டவாறு சொன்னது சட்டவிரோதம் என்றால் சரியல்ல. 2020 இல் எழுதிகொடுத்துவிட்டு காலாவதி ஆனபிறகு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.தற்போது இந்த வழக்கு போட்டு சொத்தை மீட்டு எடுக்க எனக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் என் சொத்து எனக்கு வேண்டும். செட்டில்மெணட் எழுதிகொடுத்துவிட்டு மாற்றி மறுத்து சொல்வது தவறு என்றால் ஆறு பிள்ளைகள் இருக்கும்போது எப்படி நான் அப்படி சொல்லுவேன். பத்திரம் பதிவு செய்யபோகும்போது எல்லாம் விபரமும் தெரிந்து செய்துகொடுத்துவிட்டு தற்போது

இப்படி மாற்றி சொல்லுவது சரியல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து என் மகன் வருமானத்திலிருந்துதான் வாங்கபட்டது என்றால் சரியல்ல நான் என் கணவர் இறந்தபிறகு பால்மாடு வைத்து சீட்டு பிடித்து சொத்து வாங்கினேன். என் மகனுக்கு விருப்பப்பட்டு செட்டில்மெண்ட் எழுதிகொடுத்துவிட்டு தற்போது மாறி சொல்வது சரியல்ல என்றால் சரியல்ல. நான் செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யவேண்டும் பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.09 18:54:24 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.